**தலைப்பு 276 – பதுளை மாவட்ட செயலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பதுளை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 03 இல் உள்ளவாறான பதுளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான மற்றும் முகாமைத்துவம் மூலம் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்கள் பாராட்டப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றம் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் பாராட்டப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) பதுளை மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச்செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவின பொழிப்பில் (ACA -2 நிகழ்ச்சித்திட்டம் 01 இல்) நிதிப் பிரமாணம் 66/69) இன் பிரகாரம் நிதிஏற்பாடு மாற்றல் ரூபா 8,195,000 ஆக இருந்த போதும் மாவட்ட செயலகத்தினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செலவின அறிக்கையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 5,495,000 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீதிகளுக்கு இடையே ரூபா 2,700,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சரியான தகவல்களை அடிப்படையாக கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். | 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 2,700,000 ஆன நிதி ஏற்பாடு செலவின அறிக்கையில் உள்ளடக்கப்படாமையால் சரியான பெறுமதி ரூபா 8,195,000 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரி அச்சீட்டு மாதிரி இலக்கம் SA 12 இன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு SO 392 மற்றும் SO 727 ஆம் அதிகார இலக்கங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,700,000 ஆன குறைநிரப்பு மதிப்பீடு மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக் களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 2(i) மாதிரிப் படிவத்தில் நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்களிலிருந்து கிடைத்த நிதி ஏற்பாடாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தகவல்கள் சரியாக வகைப்படுத்தலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | அத்தொகை குறைநிரப்பு மதிப்பீட்டின் நிதி ஏற்பாடொன்றல்ல எனவும் நிதி பிரமாணம் 69 இன் கீழ் பெற்றுக் கொண்ட நிதி ஏற்பாடொன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

1.6.2 **நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **கூலி மற்றும் வேலைகள் முற்பணக் கணக்கு** | | |
| (i) | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடகை மற்றும் வேலைகள் முற்பண கணக்கின் மீதி அத்திகதியில் நிதி நிலைமைக் தொடர்பான கூற்றில் கூலி மற்றும் வேலை முற்பணக் கணக்கின் மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 20,485,690 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிகள் நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறொன்றாக இருப்பதால் அதனை சரி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 25,243,366 தொகையான கூலி மற்றும் வேலை முற்பண ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி அத்திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் தேறிய சொத்துக்கள் / உரிமையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிகள் நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறொன்றாக இருப்பதால் அதனை சரி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

(ஆ) தேறிய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(v) ஆம் பந்தியின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை தொடர்பான கூற்றில் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா (170,223,414) ஆக இருந்த போதும் அது ரூபா (163,011,731) எனக் காண்பிக்கப்பட்டிருந்தது, | சரியான ஒப்பிடக்கூடிய பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | நிதி நிலைமை கூற்றில் தேறிய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள பெறுமதி ரூபா (163,011,731) பெறுமதி (173,130,663) ஆக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. |

(இ) கட்டுநிதிக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தீர்வுசெய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 2,907,249 ஆக இருந்ததுடன் தேர்தல்கள் நடவடிக்கைகளுக்காக மாவட்ட செயலகத்தினால் செலவிடப்பட்ட அத்தொகை 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தேர்தல்கள் அலுவலகத்தினால் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அம்மீதி அத்திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்வுசெய்யப்படாத கட்டுநிதி மீதி தாமதமின்றி திறைசேரிக்கு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அது தேர்தல்கள் அலுவலகத்திடமிருந்து தீர்வு செய்யப்பட வேண்டிய மீதியொன்றாக இருப்பதால் நிலைமைக் கூற்றில் காசு மற்றும் அதற்குச் சமமானவற்றின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும். | தேர்தல்கள் ஆணையாளரினால் நேரடி கணக்கு வைப்பொன்று இடம்பெற்றுள்ளதால் குறித்த கட்டுநிதி மே மாதம் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அம்மீதி கட்டுநிதி மீதியொன்றாக இருப்பதுடன் அது காசு மீதியொன்றல்ல என்பதால் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. |

**(ஈ) நிதியல்லாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | SA 82 ஆம் இலக்க திறைசேரி அச்சீட்டு மாதிரியின் பிரகாரம் 276 ஆம் தலைப்பிற்குரிய மீளாய்வாண்டில் நிதியல்லாத சொத்துக்களில் மொத்த கொள்வனவுப் பெறுமதி ரூபா 87,527,034 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 88,258,126 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீதிகளுக்கு இடையே ரூபா 731,092 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதியல்லாத சொத்துக்களின் கையேற்பதற்குரிய செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கும் போது ஏற்பட்ட தொழில்நுட்ப பிழையொன்று காரணமாக இவ்வேறுபாடு இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழான 06 விடயங்களின் ஆரம்ப, கொள்வனவு மற்றும் விற்பனை / கைதவிர்ப்பிற்கு உரிய மீதிகள் திறைசேரி அச்சீட்டுக் மாதிரி SA 82 இல் குறிப்பிடப்பட்டிருந்த மீதிகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | திறைசேரி கணனி அச்சீட்டில் உள்ளடக்கப்பட்ட மீதிகள் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட மீதிகளுடன் இணங்க வேண்டும். | பிரதேச செயலகத்தற்குரிய ஆரம்ப மீதிகள் கொள்வனவு மற்றும் கைதவிர்ப்பிற்குரிய திறைசேரி கணனி அச்சீட்டிற்கு உள்ளடக்கப்படாத காரணத்தினால் இவ்வேறுபாடு இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான விரிவான திரட்டிய பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கொடுப்பனவு மற்றும் முற்பணத்தை அறவிடுவதற்குரியதாக முறையே ரூபா 64,742,577 மற்றும் ரூபா 46,857,884 ஆன மீதிகள் காசுப் | விரிவான திரட்டிய பரீட்சை மீதியில் காண்பிக்கப் பட்டிருந்த முற்பணக் கொடுப்பனவு மற்றும் முற்பணத்தை அறவிடுவதற்குரிய பெறுமதிகள் காசுப் பாய்ச்சல் கூற்றின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கூலி மற்றும் வேலை முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது |

பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் சேவை புரிந்து அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள மற்றும் மாகாண சபையின் நிறுவனங்களுக்காக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, மரணித்த, ஓய்வுபெற்ற வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவடப்பட வேண்டிய எனினும் அறவிடப்படாமல் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய ரூபா 918,552 ஆன முற்பாணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | | | |
| | XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பந்தி | - | பதுளை பிரதேச செயலகத்திற்குரிய 02 அரச வீடுகளுக்காக உத்தியோகத்தர்களிடமிருந்து சிக்கன வாடகை அறவிடுவது தொடர்பில் முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தாபனவிதிக் கோவை XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சிக்கன வாடகை அறவிடுவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு அறிக்கை செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் சிக்கன வாடகை அறவிடுவதற்கு முன்னர் அமைச்சு செயலாளரிடம் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2010 செப்தம்பர் 07 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 3,880,321 | 02 பிரதேச செயலகங்களில் 37 சந்தர்ப்பங்களில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமல் வாழ்க்கை செலவின படிகள் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2010 செப்தம்பர் 07 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஓய்வூதிய திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தவணைகளாக அறவிடப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (இ) | 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதிய NSE/EL/01/2018 ஆம் இலக்க சமூக வலுவாக்கல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கை - | 47,500 | நலனாலிகளின் இறப்பு தொடர்பாக தகவல்கள் முறையாக பதிவேடுகளுக்குட்படுத்தாதிருந்ததுடன் பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தலில் தாமதம் இருந்ததன் காரணமாக நலனாலிகளின் மரணத்தின் பின்னரும் 5 பிரதேச செயலகங்களுக்குரிய அவர்களின் பிரதிநிதிகளுக்கு 25 சந்தர்ப்பங்களில் கூடுதலாக படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் 2.5 மற்றும் 2.6 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இதற்கு பின்னர் அவ்வாறான தொன்று இடம்பெறாமல் இருப்பதற்கு கிராம சேவை உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| | | 146,300 | நலனாலிகளின் மரணம், வேறு காரணங்கள் அடிப்படையில் நலன்புரி முறைமையிலிருந்து விலகுதல் போன்ற தகவல்கள் முறையாக பதிவேடுகளுக்குட்படுத்தாதிருந்தமை மற்றும் தகவல் முறைமையை கிரமமாக பேணாமை | சுற்றறிக்கையின் 2.5 மற்றும் 2.6 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மரணித்தல் தொடர்பான தகவல்கள் துரிதமாக பிரதேச செயலகத்திற்கு வழங்குமாறு கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்விடயங்கள் தொடர்பாக விசேட கவனமொன்ற செலுத்துவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | காரணமாக 03 பிரதேச செயலகங்களுக்குரிய காத்திருக்கும் பட்டியலில் உள்ள நலனாலிகளுக்கு வழங்க கூடியதாக இருந்த படிகள் மீண்டும் அச்செலவின விடயத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| | | 136,800 | நலனாலிகளுக்கு உரித்தான படிகள் அவர்களின் பிரதிநிதிகளுக்கு கொடுப்பனவு செய்யும் போது கிராம சேவையாளரின் பரிந்துரை மற்றும் பிரதேச செயலாளரின் அங்கீகாரம் இல்லாமல் பிரதேச செயலகமொன்றினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் 2.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பெயரிடப்பட்ட முகவர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு தபாலகங்களுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் சுழற்சிக் கடன் நிகழ்ச்சிதிட்டத்தினை செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல் கோவை - iv இன் 2.6 வது பந்தி | 1,012,410 | 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 08 பிரதேச செயலகங்களுக்குரிய 147 நலனாலிகளிடமிருந்து பெறவேண்டிய கடன் பணம் குறித்த திகதிகளில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் கடன் தொகை அறவிடப்படல் வேண்டும். | பிரதேச செயலகங்களினால் அக்கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்கள அவதானிக்கப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு** | | |
| | கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2019 | | |
| | (அ) செயற்திட்டத்திற்காக தேவையான நீர் தாங்கி மற்றும் நீர் மோட்டாரை கொள்வனவு செய்தல் மற்றும் போக்குவரத்துச் செய்தல் கிரயத்திற்கு 20 சதவீத இலாபமொன்று உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்தமை காரணமாக கந்தேகட்டிய பிரதேச செயலகத்தினால் ரூபா 32,300 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கும் போது குறித்துரைக்கப்பட்ட பணத்தை மாத்திரமே பெற்றுக்கொள்ள வேண்டும். | கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை பிடிகாசிலிருந்து அறவிடு வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| | (ஆ) கந்தேகட்டிய பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டமொன்றுக்காக ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 23,136 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | அனைத்து தாமதக் கட்டணங்கள் பிடிகாசிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் மண் நிரப்புதலுடன் பதப்படுத்தும் செயற்பாடு (earth filling with compacting) உரிய விகிதத்திற்கு பதிலாக அதற்குரியதல்லாத வேறொரு விலையின் பிரகாரம் கொடுப்பனவு செய்த காரணத்தினால் கந்தேகட்டிய பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட செயற்திட்ட மொன்றுக்காக ரூபா 73,500 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | உரிய விலையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | கூடுதலாக கொடுப்பனவு செய்ததுள்ள ரூபா 73,500 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | செயற்திட்டத்தின் மண் வெட்டுதல் மற்றும் கொங்கிரீட் இடப்படும் பகுதியின் மண் வெட்டி தயாரிப்பதற்காக ஒரே விலையை பயன்படுத்த முடியுமாக இருக்கும் போது (E 1- 027) அதற்காக வேறொரு விலை (E 1 - 005) பயன்படுத்திய காரணமாக ஹாலிஎல பிரதேச செயலகத்தினால் நிறை வேற்றப்பட்ட இரண்டு செயற்திட்டங்களுக்காக ரூபா 53,135 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | உரிய விலையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | மண்ணுடன் வீதி கொங்கிரீட் இடுவது குறிப்பிட்ட காலமாக பதமாக்கப்பட்டபின் என்பதால் இம்மண்ணுடன் வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்கு முன்னர் கழுவிச்சென்ற வீதியின் மேற்பரப்பு மட்டப்படுத்தப்பட்டு நன்றாக பதப்படுத்தப்பட்ட பாதமொன்று நிர்மாணிக்கப்பட்டு அதன் மீது கொங்கிரீட் இடுவதற்காக இவ்விலை பயன்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |

**2.2 வைப்பு மீதிகள்**

வைப்புக் மீதிகள் தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச செயலகத்திற்கு உரிய ரூபா 279,940 கூட்டுத் தொகையான 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 03 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவிற்குரிய உரிய செயற்பாடுகள பூர்த்தி செய்யப்படாமை காரணமாக வைப்புக்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஆ) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகள் மற்றும் அலுவலகங்களால் வெவ்வேறு செயற்பாடுகள், மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 02 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,907,806, தொகையான 32 வைப்புக்களின் நிதி ஏற்பாடுகள் உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | நிதி ஏற்பாடுகள் கிடைத்ததன் பின்னர் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை காரணமாக வைப்புக் கணக்கில் இப்பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பண்டாரவல பிரதேச செயலகத்தினால் ரூபா 3,971,540 மற்றும் ரூபா 3,647,972 ஆன பெறுமதியில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த 02 செயற்திட்டங்கள் நிறைவேற்றுதல் உரிய ஒப்பந்தக்காரரால் தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டங்களுக்குரிய ரூபா | எதிர்பார்க்கப்பட்ட காலஎல்லைக்குள் செயற்திட்டங்களை பூர்த்தி செய்து நலனாலிகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை | இது தொடர்பாக திட்டமிடல் பிரிவிலிருந்து தகவல்களைப் பெற்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.(மீண்டும் பதிலளிக்கையில் பணத்தை அறவிட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் |

| | | |
|---|---|---|
| 198,577 மற்றும் ரூபா 182,399 பெறுமதியான செயலாற்றல் பாதுகாப்பின் மூலம் அறவிடப்பட வேண்டிய தொகையை அரசிற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டியதுடன் அரசிற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த அவதானிப்புக்குரிய பணமல்ல என அவதானிக்கப்பட்டது) |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மஹியங்கன பிரதேச செயலகத்தினால் ரூபா 2,213,981 பெறுமதியில் 2019 திசம்பர் 25 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு உரிய செயற்திட்டமொன்று தொடர்பாக ஒப்பந்தக்காரருடன் இணங்கியிருந்த போதும் அச்செயற்திட்டம் 2020 பெப்ரவரி 19 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாலிகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இச்செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டிற்கு தொடர்வேலையாக்குமாறும் எதிர்வரும் நடவடிக்கை களுக்காக தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குமாறும் விளையாட்டுத்துறை அமைச்சிடமிருந்து வேண்டு கோளொன்று விடப்பட்டிருந்த போதும் நிதிஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஆ) ரூபா 8,558,311 பெறுமதியில் 2019 நவம்பர் 07 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு உரிய ஒப்பந்தமொன்று தொடர்பாக ஒப்பந்தக்காரருடன் இணங்கியிருந்த போதும் அச்செயற்திட்டம் 2020 பெப்ரவரி 19 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அத்திகதி வரை மாத்திரம் ரூபா 445,032 ஆன தாமதக் கட்டணங்கள அறவிடுவதற்கு மஹியங்கன பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாலிகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சீரற்ற காலநிலை மற்றும் போதியளவில் கட்டுநிதி கிடைக்காமை காரணமாக செயற்திட்டத்தின் காலத்தை நீடிப்பதற்கு நேர்ந்ததாகவும் முறையான காலநீடிப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பஸ்ஸர பிரதேச செயலகத்தினால் 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 48 நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்குரிய ஒப்பந்தமொன்று தொடர்பாக ஒப்பந்தக்காரருடன் இணங்கியிருந்த ரூபா 3,605,926 ஆன செயற்திட்டம் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாலிகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இச்செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டிற்காக தொடர் வேலையாக்கு வதற்கு அங்கீகாரம் பெற்றுத் தருமாறும் எதிர்வரும் நடவடிக்கை களுக்காக தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குமாறும் விளையாட்டுத்துறை அமைச்சிடம் வேண்டுகோளொன்று விடப்பட்டிருந்த போதும் நிதிஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள முடியாததன் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹாலிஎல பிரதேச செயலகத்தினால் ரூபா 73,462 செலவு செய்து நிறைவேற்றப்பட்டிருந்த செயற்திட்ட மொன்றுக்குரிய நலனாலிகளின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான வகையில் நிறைவேற்றாமை காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | நலனாலிகளின் தேவைப்பாடுகள் மற்றும் நோக்கங்கள் முறையாக இனங்காணப்பட்டு அந்நோக்கங்கள் நிறைவேற்றப்படக் கூடிய வகையில் செயற்திட்டம் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | வீதியின் இறுதிப்பகுதி மண் வெட்டி நிர்மாணிப்பதற்கு தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தமை முதலாவது கட்டமாகவும் எதிர்காலத்தில் வீதி அபிவிருத்திக்காக கிடைக்கும் நிதி ஏற்பாடுகளின் கீழ் இவ்வீதியை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அரசிற்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரித்து தொடர்பாக சிக்கல்களை தீர்வு செய்தல் | | |
| 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அரசிற்குரிய ஒவ்வொரு வாகனமும் அந்நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யும் தேவைப்பாட்டை நிறைவேற்று வதற்காக வாகன உரிமை தொடர்பான காணப்படும் சிக்கல்கள் 2018 யூன் 30 இற்கு முன்னர் முதலாவது இணக்கப் பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் சொர்ணதொட்ட பிரதேச செயலகத்திற்குரிய மோட்டார் சைக்கிலொன்று தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு உரித்து தொடர்பாக காணப்படும் சிக்கல்களை தீர்வு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலாளருக்கு மோட்டார் சைக்கிளின் உரித்தினை கையேற்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல் | | |
| (i) பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்றின் திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறு மோட்டார் போக்குவரத்து பரிசோதகரால் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை திருத்த வேலைகள் இடம் பெற்றிருக்கவில்லை. | சொத்துக்களின் திருத்தங்கள் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். | திருத்த வேலைகளுக்காக போதியளவு நிதிஏற்பாடு இல்லாமையால் இத்தாமதம் ஏற்பட்டதாகவும் நிதிஏற்பாடு கிடைத்ததன் பின்னர் உரி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**(இ) விளைவற்ற சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| நிறுவகத்தின் உத்தியோகத்தர்களால் வீட்டு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கையில் அவ்வேண்டுகோள்கள் கருத்திற் கொள்ளப்படாமல் பிரதேச செயலகத்திற்குரிய அரசாங்க விடுதயொன்று 02 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்து. | அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்கள் ஆகக்கூடிய செயற்திறனுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச செயலகங்களினால் சமர்ப்பித்த நிபந்தனைகளுக்கு உத்தியோகத்தர்கள் இணங்காமையால் உத்தியோகபூர்வ விடுதி 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரிதீமாலியத்த பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று விபத்திற்கு உட்பட்டு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டும் 05 மாதங்களும் கடந்திருந்த போதும் ரூபா 6,349,333 தொகையான நட்டத்தை தீர்வு செய்வது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மீண்டும் பரிசோதனை சபையொன்று நியமிப்பிக்கப்பட்டு நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) மாவட்ட செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அவ்விபத்தினால் ரூபா 4,291,270 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அந்நட்டம் சேதங்களிலிருந்து ரூபா 2,988,693 தொகை குறித்த காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,302,576 ஆன எஞ்சிய நட்டம் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரை தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக தாமதமின்றி நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நட்டம் சேதங்களிலிருந்து ரூபா 2,988,693 தொகை காப்புறுதி கம்பனியிடமிருந்து தீர்வு செய்யப்பட்டிருந்ததாகவும் காப்புறுதியிலிருந்து கிடைத்த தொகை 2018 திசெம்பர் 31 இற்கு முன்னர் திட்டவட்டமாக இனங்காண முடியாமல் இருந்தமையால் அவ்வாண்டு நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,144,000 பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டதால் ரூபா 1,302,576 திருத்தச் செலவினமாக தீர்வுசெய்யப்பட்டு எஞ்சிய ரூபா 841,423 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஊவா பரணகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று விபத்திற்கு உட்பட்டு 08 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் அதற்குரிய நட்டம் ரூபா 500,000 என 2019 மே 15 ஆந் திகதி பதுளை மாவட்ட விலை மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப பரிசோதனை யொன்று மேற்கொள்ளப்பட்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மீண்டும் பரிசோதனை சபையொன்று நியமிப்பிக்கப்பட்டு உள்ளதாகவும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தின் காப்பகத்தின் சாவி காணாமல் போனமையால் ரூபா 29,700 ஆன நட்டம் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்ப்டிருக்கவில்லை. | பொறுப்பான தரப்பினரிடமிருந்து அந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீண்டும் பரிசோதனை சபையொன்று நியமிப்பிக்கப்பட்டதாகவும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களுக்குரிய 2008 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்றிருந்த 07 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக கணக்கிடப்பட்டிருந்த நட்டம் ரூபா 1,567,548 ஆக இருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவ்விபத்து தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சட்டரீதியான நடவடிக்கைகள் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் காப்புறுதியிலிருந்து அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மீண்டும் பரிசோதனை குழு நியமிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்படும் போது சம்பளத்தை கணிப்பிடுவதற்குரியதாக | சரியாக ஓய்வூதியம் கணிப்பிட வேண்டியதுடன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை ஓய்வூதிய திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றங்களுக்கு உட்படக்கூடிய சட்டங்கள், விதிகள், சுற்றறிக்கைகள், ஆலோசனை கடிதங்கள் தொடர்பாக கவனத்துடன் செயற்படாமை மற்றும் கணக்கீட்டு தவறுகள் காரணமாக 06 பிரதேச செயலகங்களுக்குரிய 114 ஓய்வூதியம் பெறுபவோருக்கு ரூபா 12,150,749 ஆன ஓய்வூதியம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அறவிட்டுக் கொள்ளல் வேண்டும். | அறவிடப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஓய்வூதியம் பெறுவோர் மரணித்தவுடன் அது தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு அறிக்கையிடுதல் கிராம உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதும் இறப்பை முறையாக அறிக்கையிடாத காரணத்தினால் பதுளை பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் பெறும் இருவருக்கு ரூபா 109,894 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஓய்வூதியம் பெறுவோர் மரணிக்கும் போது அது தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு அறிவூட்டுவதற்கு கிராம சேவையாளர் அறிவூட்டப்பட வேண்டியதுடன் கடமையை பகிஷ்கரிக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட பணம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | கந்தேகெட்டிய பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதியம் பெறும் ஒருவருக்கு ஏனைய படிகளாக ரூபா 88,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியம் பெறுவோர் மீண்டும் விவாகம் புரிந்தமையால் ஓய்வூதிய கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் முதல் 2019 மே மாதம் வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 24,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூடுதலான கொடுப்பனவு இடம்பெறாத வகையில் ஓய்வூதியத்தை செலுத்த வேண்டும். | ஆவணங்களை பூர்த்தி செய்ய தாமதித்த காரணத்தினால் அறவீடுகள் தாமதமானதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | மஹியங்கன பிரதேச செயலகத்திற்குரிய 03 அரச வீடுகளுக்குரிய நிலுவை நீர் கட்டணங்கள் மற்றும் மீள் வழங்கலின் கட்டணங்களாக | நிலுவை நீர்க்கட்டணங்களை பொறுப்பான தரப்பினரிடமிருந்து முறையாக அறவிட்டு | நிலுவை நீர்க்கட்டணங்களைள உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிவதற்கும் குடியிருப்பிற்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 73,282 தொகை தேசிய நீ வழங்கல் மற்றும் நீர் வடிகாமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | குறித்த பட்டியல்களை உரிய காலத்தில் தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொருத்தமற்ற உத்தியோகபூர்வ விடுதிகளின் நீர் இணைப்பை துண்டிப்பதற்கும் நிலுவை பட்டியல் தொடர்பாக நீர் வளங்கள் சபையிடம் விசாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | | |
| (i) வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் மூலம் சமூர்த்தி நலனாலிகளுக்கு வெவ்வேறு கடன் நிகழ்ச்சிகளின் கீழ் 07 பிரதேச செயலகங்களுக்குரிய 1460 நலனாலிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 42,580,338 ஆன கடன் தொகை குறித்துரைக்கப்ட்ட திகதியில் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடன் தொகையை குறித்துரைக்கப்பட்ட திகதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது |
| (ii) வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் மூலம் 06 பிரதேச செயலகங்களுக்குரிய வெவ்வேறு கடன் நிகழ்ச்சிகளின் கீழ் 554 நலனாலிகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 16,728,030 ஆன கடன் தொகையை குறித்துரைக்கப்ட்ட திகதியில் அறவிடப்படாமை காரணமாக அக்கடன் அறவிமுடியாக் கடனாக இருந்தது. | கடன் தொகையை குறித்துரைக்கப்பட்ட திகதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது |